# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## முதலாம் தவணை மதிப்பீட்டு பரீட்சை – 2022

| தரம் - 11 | வணிகக்கல்வியும் கணக்கீடும் | நேரம்: 1.00 மணித்தியாலம் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ......................................................................................

**பகுதி - I**

**கவனிக்க :**

**1) எல்லா வினர்களுக்கும் விடை தருக.**

**2) 1 - 40 வரையயுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

**01. சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு 1 - 5 வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் ஒன்றியம், பாடசாலை கூட்டுறவுச் சங்கம், கல்விசார் மற்றும் கல்விசாரா ஊழியர்களின் ஒத்துழைப்பில் விஜிதா அரிசி ஆலை வணிக உரிமையாளர் சயந்தன் என்பவரால் அன்பளிப்புச் செய்யப்பட்ட அரிசியால் தயாரித்து வழங்கப்படும் அரிசிக் கஞ்சி கோப்பையினை மாணவர்கள் விரும்புகின்றனர்.

01. முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தால் நிறைவேற்றப்படும் மனித தேவை யாது?
1) உணவு 2) உடை 3) கல்வி 4) சுகாதாரம்

02. முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தின் புறச்சூழல் காரணியொன்றிற்கான உதாரணம்
1) கல்விசார் ஊழியர்கள் 2) கல்விசாரா ஊழியர்கள்
3) விஜிதா அரிசி ஆலை 4) பாடசாலை மாணவர்கள்

03. மேலே தரப்பட்ட சம்பவத்தில் குறித்த அரிசிக்கஞ்சியைத் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் அரிசி எத்தகைய உற்பத்திக் காரணிக்கு உரித்தாகும்.
1) நிலம் 2) உழைப்பு 3) மூலதனம் 4) முயற்சியாண்மை

04. மேலே தரப்பட்ட சம்பவத்தில் காணப்படும் அரசதுறையைச் சார்ந்த வணிக நிறுவனம்
1) விஜிதா அரிச ஆலை 2) பழைய மாணவர் ஒன்றியம்
3) பாடசாலைக் கூட்டுறவுச் சங்கம் 4) முத்துத்தம்பி மகா வித்தியாலயம்

05. மேலே தரப்பட்ட சம்பவத்தில் காணப்படும் விஜிதா அரிசி ஆலை வணிகம் தொடர்பினை சரியாகக் காட்டும் விடைத்தொகுதி எது?
1) இவ் வணிகம் தொடர்பில் சயந்தனின் பொறுப்பு வரையறுக்கப்பட்டுள்ளது.
2) இவ் வணிகத்தின் பெயரைக் கட்டாயம் பதிவு செய்ய வேண்டும்.
3) இவ் வணிகத்திற்கு சட்ட ஆளுமை உள்ளது.
4) இவ் வணிகம் இலாப நோக்கமற்ற வணிகமாகும்.

06. சாருமதி உற்பத்திகள் வணிகத்திற்கு 2021 ஆம் ஆண்டுக்கான சிறந்த முயற்சியாளருக்கான விருது கிடைக்கப்பெற்றமையானது. அவ் வணிகத்தின்
1) பலமாகும் 2) பலவீனமாகும் 3) வாய்ப்பாகும் 4) அச்சுறுத்தலாகும்

07. ஜனநாயக நிர்வாகம், சுயமான திறந்த அங்கத்துவம் என்பன வணிக அமைப்பொன்றின் பண்புகளாகும். அத்தகைய வணிக அமைப்பிற்கான உதாரணம்
1) மகேஸ் மற்றும் சகோதரர்கள் 2) பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்
3) இலங்கை புகையிரத திணைக்களம் 4) வரை / ஸ்ரீலங்கா டெலிகொம் பொதுக்கம்பனி

08. பொருட்களை உற்பத்தி செய்யும் வணிகமானது
1) கூட்டுறவு மொத்த வியாபார சங்கம்
2) வரையறுக்கப்பட்ட இலங்கை டயர் (தனியார்) கம்பனியாகும்
3) இலங்கை விமான சேவைகள் கம்பனியாகும்
4) இலங்கை மத்திய வங்கியாகும்.

09. இலங்கை ரூபாவின் பெறுமதி தொடர்பில் அமெரிக்க டொலரின் பெறுமதியானது அதிகரித்துச் செல்கின்றது. இது ஒரு ஆடை ஏற்றுமதிக் கம்பனிக்கான
1) புறச்சூழல் காரணியாகும்
2) பொருளாதார சூழல் காரணியாகும்
3) சட்டச்சூழல் காரணியாகும்
4) தொடர்பாடல் சூழல் காரணியாகும்

10. பின்வருவன வணிக நடவடிக்கைகள் சம்பந்தப்பட்ட வகையில் அக்கறையுடைய தரப்பினர் அடைந்து கொள்வதற்கான சில இலக்குகளாகும்.
A - நியாயமான சம்பளத்தைப் பெற்றுக்கொள்ளல்
B - வரிவிதிப்பு
C - தொடர்ச்சியாகக் கட்டளைகளைப் பெற்றுக்கொள்ளல்

மேலே தரப்பட்ட A, B, C ஆகிய இலக்குகளை அடைந்து கொள்வதற்கு அக்கறை செலுத்தும் தரப்பினரைச் சரியான ஒழுங்குவரிசையால் எடுத்துக்காட்டும் விடையைத் தெரிவு செய்க.

1) ஊழியர்கள், அரசாங்கம், வழங்குநர்கள்
2) ஊழியர்கள், உரிமையாளர்கள், வழங்குநர்கள்
3) ஊழியர்கள், வங்கி, போட்டியாளர்கள்
4) முகாமையாளர், அரசாங்கம், வழங்குநர்கள்

11. கீழே சம்பவங்கள் சில தரப்பட்டுள்ளன.
A - கமலன் “மொடர்ன் சலூன்” இற்குச் சென்று தலைமுடியினை வெட்டிக் கொள்ளல்
B - சசிகரன் தனது பாவனைக்கு ஜப்பானிலிருந்து மோட்டார் வாகனமொன்றை இறக்குமதி செய்தல்
C - தர்சினி பூ வியாபாரம் இனால் புதிய பூக்கூடைகள் இரண்டினைக் கொள்வனது செய்தல்
D - கிரிசன் தனது அறுவடையில் 50கிலோ நெல்லினை அரிசி ஆலை உரிமையாளர் ஒருவருக்கு விற்பனை செய்தல்.

மேலே தரப்பட்ட சம்பவங்களில் மொத்த வியாபார நடிவடிக்கைகளானவை
1) A யும் B யும்
2) A யும் C யும்
3) B யும் D யும்
4) C யும் D யும்

❖ **பின்வரும் சம்பவத்தைப் பயன்படுத்தி 12, 13 ஆகிய வினாக்களுக்கு விடை தருக.**

மக்கள் வங்கியில் நடைமுறைக் கணக்கொன்றைக் கொண்டிருக்கும் ரமேஸ் என்பவர் தனது வாடிக்கையாளரான தீபன் என்பவருக்கு ரூ. 50 000 இற்கு காசோலை ஒன்றை வழங்கியிருந்தார். தீபன் அதனை வங்கிக் கருமபீடத்தில் சமர்ப்பித்து பணமாக மாற்றினார்.

12. காசோலை தொடர்பில் பணம் வழங்குபவரையும் (Drawee) பணம் பெறுபவரையும் (Payee) முறையே எடுத்துக் காட்டும் விடை
1) மக்கள் வங்கி, தீபன்
2) தீபன், மக்கள் வங்கி
3) மக்கள் வங்கி, கமலன்
4) கமலன், தீபன்

13. மேலே தரப்பட்ட சம்பவத்தில் வழங்கப்பட்ட காசோலையானது
1) பொதுமுறைக் குறுக்கு கோடிட்டதாகும்
2) சிறப்பு முறைக் கோடிட்டதாகும்
3) குறுக்கு கோடிடாத காசோலையாகும்
4) வங்கி நடைமுறைக் கணக்கொன்றில் வைப்புச் செய்ய முடியாததாகும்

14. எந்தவொரு வங்கிக் கணக்கையும் கொண்டிராத பவன் தனது மோட்டார் வாகனத்தின் எரிபொருள் பற்றுச்சீட்டுக்கான கொடுப்பனவை இலத்திரனியல் அட்டையொன்றின் மூலம் செலுத்தினார்.
1) வரவு அட்டை
2) கடன் அட்டை
3) SET அட்டை
4) PET அட்டை

15. ரமணன் என்பவர் ரூ. 500 000 பெறுமதியினை தனது மோட்டார் வாகனத்தை அதே பெறுமதியில் காப்புறுதி செய்து கொண்டார். விபத்துக்குள்ளானதில் ரூ. 200 000 பெறுமதியான தேசம் ஏற்பட்டது. ரமணன் காப்புறுதிக் கம்பனியிடமிருந்து ரூ. 500 000 ஐ சேதத்திற்கான நட்ட ஈடாகக் கோரினார். காப்புறுதிக் கம்பனியிடமிருந்து ரமணனுக்கு எவ்வளவு தொகை நட்ட ஈடாகக் கிடைக்கும்.
1) ரூ. 500 000
2) ரூ. 200 000
3) ரூ. 300 000
4) ரூ. 100 000

16. ஆடைத் தொழிற்சாலையொன்றை நடத்திவரும் தரணிகா தனது காப்புறுதி ஒப்பந்தமொன்றைப் பிணையாக வைத்து வீட்டைக் கட்டுவதற்காகக் கடனொன்றைப் பெற்றார். தரணிகா கடனைப் பெறப் பயன்படுத்தியது.
1) தீக் காப்புறுதி காப்புறுதி ஒப்பந்தம்
2) வழிப்பணக் காப்புறுதி ஒப்பந்தம்
3) ஆயுள் காப்புறுதி ஒப்பந்தம்
4) மோட்டார் வாகன காப்புறுதி ஒப்பந்தம்

17. உள்ளக வாய்மொழி மூல, இலத்திரனியல் தொடர்பாடல் முறையினைக் குறிப்பிடும் சந்தர்ப்பமொன்றைத் தெரிவு செய்க.
    1) காலைக் கூட்டத்தின் போது பாடசாலை அதிபர் ஒலிப்பெருக்கியினை பாவித்து உரையாற்றுதல்
    2) உற்பத்தி முகாமையாளர் தொலைபேசியூடாக வழங்குநர்களிடம் மூலப்பொருட்களுக்கான கொள்வனவுக் கட்டளையிடல்.
    3) பெற்றோர் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு பெற்றோருக்கு வகுப்பாசிரியர் கடிதம் அனுப்புதல்
    4) விற்பனை முகாமையாளர் மின்னஞ்சல் மூலம் புதிய விலைப்பட்டியல்களை தமது வாடிக்கையாளர்களுக்கு அனுப்புதல்


18. "யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தினை கவர்ச்சிகரமாக நவீனமயப்படுத்துதல். இக் கூற்றில் வலியுறுத்தப்படும் போக்குவரத்தின் அடிப்படைக் கூறு எது?
    1) வழி    2) ஊடகம்    3) வலு    4) தரிப்பிடம்

19. பொருட்களைக் கொண்டு செல்லும் பாரிய கப்பல் ஒன்றின் போக்குவரத்து மூலகங்களுக்கான உதாரணமாக அமைவது
    1) துறைமுகம், ஆகாயவழிகள், டீசல்    2) டீசல், துறைமுகம், பிரதான வீதி
    3) டீசல், நீர்வழிகள், துறைமுகம்    4) நீர்வழிகள், விமான நிலையம், டீசல்

வெளியீட்டாளர் ஒருவர் கொழும்பு புத்தகக் கண்காட்சிச் சந்தையின் பிரதான நுழைவாயிலின் பின்புறமாக தனது கண்காட்சிக்கூடத்தை ஒதுக்கீடு செய்வதற்குத் தீர்மானித்திருந்ததுடன் அதற்கான ஊழியர் ஒருவரையும் ஆட்சேர்ப்புச் செய்தார்.

20. இச் சம்பவத்தில் காணப்படும் இரண்டு முகாமைத்துவக் கருமங்கள்
    1) திட்டமிடல், நெறிப்படுத்தல்    2) திட்டமிடல், ஒழுங்கமைத்தல்
    3) ஒழுங்கமைத்தல், கட்டுப்படுத்தல்    4) நெறிப்படுத்தல், ஒழுங்கமைத்தல்

21. இச் சம்பவத்தில் குறிப்பிடப்பட்ட சந்தைப்படுத்தல் கலவை மாறிகள் இரண்டுமாவன
    1) மேம்படுத்தல், உற்பத்திப் பொருள்    2) மேம்படுத்தல், இடம்
    3) உற்பத்தி பொருள், இடம்    4) உற்பத்திப் பொருள், விலை

22. பின்வரும் உருவப்படங்களில் இலத்திரனியல்லாத சைகைத் தொடர்பாடல் முறை
    1) 
    2) 
    3) 
    4) 

23. அடிப்படைக் கணக்கீட்டுச் சமன்பாட்டைச் சரியாக எடுத்துக்காட்டும் விடையைத் தெரிவு செய்க.
    1) சொத்துக்கள் + பொறுப்புக்கள் = உரிமையாண்மை
    2) சொத்துக்கள் - பெறுப்புக்கள் = உரிமையாண்மை
    3) சொத்துக்கள் + உரிமையாண்மை = பொறுப்புக்கள்
    4) உரிமையாண்மை - பொறுப்புக்கள் = சொத்துக்கள்

❖ **பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 24 – 26 வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

லாவண்யா வணிகத்தில் 01 நவெம்பர் 2021 இற்கான கணக்கீட்டுச் சமன்பாடு கீழே தரப்பட்டுள்ளது.

| சொத்துக்கள் | = | உரிமையாண்மை | + | பொறுப்புக்கள் |
|---|---|---|---|---|
| ரூ | | (ரூ) | | (ரூ) |
| 100 000 | = | 50 000 | + | 40 000 |

A - ரூ 20 000 இற்கு பொருட்களை கடன் கொள்வனவு செய்தல்.
B - ரூ 10 000 இற்கு பொருட்களை உடன் காசிற்கு கொள்வனவு செய்தல்.
C - கடன் கொடுத்தோருக்கு ரூ. 15 000 இனைச் செலுத்துதல்.
D - ரூ 10 000 இற் கொள்வனவு செய்த பொருட்களை ரூ. 15 000 இற்கு உடன் காசிற்கு விற்பனை செய்தல்.

24. மேலே தரப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் பின்னர், இவ் வணிகத்தின் பொறுப்புக்களின் பெறுமதி யாது?
   1) ரூ 45 000   2) ரூ. 55 000   3) ரூ. 65 000   4) ரூ. 75 000

25. வணிகத்தில் 1.11.2021 இல் காணப்பட்ட மொத்தச் சொத்துப் பெறுமதியால் மாற்றத்தை ஏற்படுத்தாத கொடுக்கல் வாங்கல் எது?
   1) A   2) B   3) C   4) D

26. 2021 நவெம்பர் முதல் வாரத்தின் இறுதியில் வணிகத்தின் உரிமையாண்மை
   1) ரூ. 2000 இனால் அதிகரிக்கும்   2) ரூ. 7000 இனால் அதிகரிக்கும்
   3) ரூ. 5000 இனால் அதிகரிக்கும்   4) ரூ. 5000 இனால் குறைவடையும்

27. வாணி களஞ்சியமானது 10 இனிப்புப் பொதிகளை ஒவ்வொன்றும் ரூ. 200 வீதம் கடனுக்கு விற்பனை செய்ததுடன் 10% வியாபாரக் கழிவையும் கழித்துக் கொண்டது. இக் கொடுக்கல் வாங்கல் காரணமாக இவ் வணிகத்தின்
   1) கொடுத்த கழிவு ரூ. 200 ஆல் அதிகரிக்கும்
   2) விற்பனை வருமானம் ரூ. 2000 ஆல் அதிகரிக்கும்
   3) கடன்பட்டோர் தொகை ரூ. 2000 ஆல் அதிகரிக்கும்
   4) கடன்பட்டோர் தொகை ரூ 1800 ஆல் அதிகரிக்கும்

28. செலவு அதிகரித்தல் வரவு குறைதல் எனும் இரட்டைப் பதிவுத் தத்துவத்தை எடுத்துக்காட்டும் கணக்கு
   1) கொடுத்த கழிவு கணக்கு   2) காகு கணக்கு
   3) கொள்வனவுகள் கணக்கு   4) மூலதனக் கணக்கு

29. பின்வருவனவற்றில் நடைமுறைப் பொறுப்பை மட்டும் உள்ளடக்கிய தொகுதி எது?
   1) காசு, வங்கி   2) கடன்பட்டோர், வங்கி
   3) கடன் கொடுத்தோர், அட்டுறு வாடகை   4) கடன் கொடுத்தோர், வங்கிக்கடன்

30. கடன் விற்பனைக்கான மூலஆவணம் பின்வருவனவற்றுள் எது?
   1) கொள்வனவுப் பட்டியல்   2) விற்பனைப் பட்டியல்
   3) நாட்குறிப்பு கைச்சாத்து   4) பற்றுச்சீட்டு

31. வணிகமொன்றின் சென்மதியாளருக்குக் காசோலை மூலம் கொடுப்பனவு செய்யப்பட்டதனைப் பதிவு செய்வதற்குப் பொருத்தமான மூலப்பதிவேடு
   1) காசுக்கணக்கு   2) கொடுப்பனவு உறுதிச்சீட்டு
   3) வங்கிக்கணக்கு   4) பொதுநாட்குறிப்பு

32. பின்வருவனவற்றுள் உரிமையாண்மையில் தாக்கத்தை ஏற்படுத்தாக கொடுக்கல் வாங்கல்களைத் தெரிவு செய்க.
   1) காசாக செலுத்திய காப்புறுதிக் கட்டணம் ரூ. 500
   2) காசாகப் பெற்ற மேலதிக வருமானம் ரூ. 1000
   3) உடைமையாளர் தனது சொந்தப் பணத்திலிருந்து கடன் கொடுத்தோருக்குச் செலுத்திய தொகை ரூ. 6000
   4) செலுத்த வேண்டியிருந்த ரூ. 2000 மின்சாரக் கட்டணங்கள் காசாகச் செலுத்தியது.

33. பின்வருவனவற்றுள் பொதுப்பேரோட்டில் பதிவு செய்ய வெண்டிய கொடுக்கல் வாங்கல்களைத் தெரிவு செய்க.
   1) சொந்தத் தேவைக்காக உடைமையாளரால் ரூ. 2000 காசு எடுக்கப்படல்
   2) கடன்பட்டோரமிடருந்து வரவெண்டிய தொகை ரூ. 5000 அறிவிடமுடியாக்கடனாகப் பதிவழிக்கப் படுதல்.
   3) வணிகப் பயன்பாட்டுக்காக ரூ. 100 000 பெறுமதியான இயந்திரமொன்று காசுக்குக் கொள்வனவு செய்யப்படுதல்.
   4) வணிகத்துக்காக ரூ. 10 000 பெறுமதியான பொருட்கள் கடனுக்குக் கொள்வனவு செய்யப்படுதல்

34. வணிகமொன்றின் சில்லறைக் காசேடு தொடர்பாக சில தகவல்கள் கீழே தரப்படுகின்றன.
01.01.2021 இல் சில்லறைக் காசாளரிடம் இருந்த சில்லறைக் காசேட்டு மீதி ரூ. 200
01.01.2021 இல் மீள்நிரப்பப்பட்ட சில்லறைக் காசு வரக்கட்டு ரூ. 1800
31.01.2021 இல் சில்லறைக் காசாளரிடமிருந்த சில்லறைக் காசேட்டு மீதி ரூ. 300

வணிகத்தின் சில்லறைக்காசு வசக்கட்டு தொகையையும் ஜனவரி மாதத்தின் சில்லறைக் காசேட்டு செலவினங்களையும் முறையே எடுத்துக்காட்டும் விடையைத் தெரிவு செய்க.
1) ரூ. 200, ரூ. 1500   2) ரூ. 1800, ரூ. 1500   3) ரூ. 1800, ரூ. 1700   4) ரூ. 2000, ரூ. 1700

35. வளர்மதி வணிகத்தின் 2021 மார்ச் மாதத்திற்கான வங்கிக்கூற்றின் செலவு மீதி ரூ. 15 000 ஆகும்.
1) வணிகத்தின் ஒரு சொத்தாகும்   2) வணிகத்தின் ஒரு பொறுப்பாகும்
3) வங்கியின் ஒரு சொத்தாகும்   4) வணிகத்தின் ஒரு வங்கி மேலதிகப் பற்றாகும்

36. வணிகமொன்றின் வங்கிக் கணக்கில் பதிவிடாமல் வங்கிக்கூற்றில் காணக்கூடிய கொடுக்கல் வாங்கல் எது?
1) ரூ. 60 000 இனை வங்கிக் கணக்கில் வைப்பிடல்
2) வங்கிக்கு நேரடியாக ரூ. 600 இற்கு பங்கிலாப வருமானம் பெறப்படல்
3) ரூ. 20 000 இற்கு வழங்கப்பட்ட காசோலையொன்று நிற்கு வங்கியினால் காசு செலுத்தப்படல்
4) வைப்பிலிட்ட ரூ. 20 000 காசோலை, வங்கியினால் கணக்கில் செலவு வைக்கப்படல்

37. கைவினைப் பொருட்களை உற்பத்தி செய்யும் வணிகமொன்றின் விற்பனை நாளேட்டில் பதிவு செய்யப்படும் கொடுக்கல் வாங்கல்கலைத் தெரிவு செய்க.
1) கைவினைப் பொருட்களை கடனுக்கு விற்பனை செய்தல் ரூ. 30 000
2) கைவினைப் பொருட்களை காசுக்கு விற்பனை செய்தல் ரூ. 40 000
3) கைவினைப் பொருள் உற்பத்தி இயந்திரத்தை ரூ. 85 000 கடனுக்கு விற்பனை செய்தல்
4) னைவினை உற்பத்திக்காக கடனுக்குக் கொள்வனவு செய்த துணி இருப்பை ரூ. 60 000 காசுக்கு விற்பனை செய்தல்

38. கடன் கொடுத்தோருக்கு வழங்கப்பட்ட ரூ. 20 000 பெறுமதியான காசோலை மறுக்கப்பட்டது. இதனால் வணிகத்தில்
1) வங்கிக் கணக்கு மீதி அதிகரிப்பதோடு கடன் கொடுநர் கணக்கு மீதி அதிகரிக்கும்
2) வங்கிக் கணக்கு மீதி அதிகரித்து கடன் கொடுநர் கணக்கு மதி குறையும்
3) வங்கிக் கணக்கு மிதி குறைந்து கடன் கொடுத்தோர் கணக்கு மீதி அதிகரிக்கும்
4) வங்கிக் கணக்கு மீதி குறைவதோடு கடன்கொடுநர் கணக்கு மீதியும் குறையும்

39. வணிக மொன்றினால் ராமு என்பவரிடமிருந்து கடனுக்குக் கொள்வனவு செய்யப்பட்ட சரக்குகள் ரூ. 68 000 ஆனது ராமு கணக்கில் ரூ. 86 000 எனப் பதிவு செய்யப்பட்டது.
இவ் வழுவைத் திருத்துவதற்கான மூலப் பதிவேடு
1) பொதுநாட்குறிப்பேடு   2) கொள்வனவு நாளேடு   3) காசேடு   4) விற்பனை நாளேடு

40. கீழே தரப்படுவது கணக்கீட்டுத் தவறொன்றைத் திருத்துவதற்குப் பொருத்தமான திருத்த நாட்குறிப்புப் பதிவு ஆகும்

| | | |
|---|---|---|
| அலுவலக உபகரணக் கணக்கு | வரவு | ரூ. 60 000 |
| அலுவலகச் செலவுகள் கணக்கு | செலவு | ரூ. 60 000 |

இவ் வணிகத்தின் கணக்குப் பதிவின்போது நிகழ்ந்த தவறு
1) அலுவலகச் செலவுகள் ரூ. 60 000 அலுவலக உபகரணக் கணக்கில் வரவு வைக்கப்பட்டது.
2) காசுக் கொள்வனவு செய்யப்பட்ட அலுவலக உபகரணங்கள் ரூ. 60 000 ஏடுகளிலிருந்து முற்றாக விடப்பட்டுள்ளமை.
3) செலுத்திய அலுவலகச் செலவுகள் ரூ. 60 000 முற்றாகப் பதிவு செய்யப்படாமை
4) அலுவலக உபகரணக் கொள்வனவு ரூ 60 000 அலுவலகச்செலவுகள் கணக்கில் வரவு வைக்கப்பட்டமை.

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி | | |
| முதலாம் தவணைக்குரிய மதிப்பீட்டு பரீட்சை – 2022 | | |
| தரம் - 11 | வணிகக்கல்வியும் கணக்கீடும் | நேரம்: 2.00 மணித்தியாலம் |

பெயர் / சுட்டெண் ..............................................................................................

பகுதி - II

**05 வினாக்களிற்கு விடையளிக்குக.**

**(1ம் வினா உட்பட 'அ' பகுதியிலிருந்து 2 வினாக்களையும் 'ஆ' பகுதியிலிருந்து 2 வினாக்களையும் தெரிவு செய்து மொத்தம் 05 வினாக்களிற்கு விடையளிக்குக. )**

**01. பின்வரும் சம்பவ கற்கையைப் பயன்படுத்தி 1 தொடக்கம் 10 வரையான வினாக்களிற்கு விடையளிக்குக.**

1/1/2022 இல் வணிகப் பட்டதாரியான திரு.மில்ரன் என்பவர் ரூபா 1000 000/= மூலதனமாக இட்டு சன நெருக்கடி மிக்க நகரமொன்றில் "மாஸ் சென்ரர்" என்ற பெயரில் வணிகமொன்றை ஆரம்பித்தார். இயற்கை முறையில் உற்பத்தி செய்யப்படும் பாற்பண்ணையொன்றிலிருந்து பால் பொருட்களைக் கொள்வனவு செய்து விற்பனை செய்கின்றார். தனது வணிக செயற்பாட்டிற்காக அனுபவமிக்க முகாமையாளர் ஒருவரையும் வேறு இரு தொழிலாளர்களையும் நியமித்திருந்தார்.

03/1/2022 இல் 200 000/= வங்கிக்கடனைப் பெற்றிருந்த அதேவேளை 5.1.22 இல் 500 000/= ரூபா பெறுமதியான குளிர்சாதனப் பெட்டி ஒன்றையும் வணிகத்தின் தேவைக்காக சில்வா கம்பனியிடமிருந்து கொள்வனவு செய்தார்.

அரசாங்கமானது உள்ளூர் பாற்பொருட்கள் உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனையாளர்களுக்கு ஊக்கு விப்புத் திட்டமொன்றை அறிவித்திருந்தது. இதனால் பல படித்த வாலிபர்கள் இத்துறையில் ஈடுபட ஆர்வம் கொண்டுள்ளனர்.

2022 ஜனவரி மாத மேலதிக காசு நடவடிக்கைகள் பின்வருமாறு
- விற்பனை 600 000/=
- தளபாடக் கொள்வனவு 100 000/=
- கொள்வனவு 300 000/=
- சம்பளம் செலுத்தியது 30 000/=
- தொலைபேசிக் கட்டணம் 20 000/=
- நடைமுறைக் கணக்கு ஆரம்பித்தது 50 000/=

ஊழியர்களுக்கு தகவல் தொழில்நுட்ப அறிவு போதாமையினால் நிகழ்நிலை வியாபாரத்தை மேற்கொள்ள முடியவில்லை.
திரு.மில்ரன் எதிர்காலத்தில் தனது நண்பனுடன் இணைந்து வணிகத்தை விரிவாக்கவும் உள்ளார்.

1. 1) உரிமையின் அடிப்படையில் "மாஸ் சென்ரர்" வியாபாரமானது எவ்வகை வியாபாரமாகும்?
   2) திரு.மில்ரன் தனது நண்பனுடன் இணைந்து உருவாக்கக்கூடிய வணிகம் யாது?
   (02 புள்ளிகள்)

2. 1) உற்பத்தி பொருளின் தன்மையின் அடிப்படையில் "மாஸ் சென்ரர்" எவ்வகை வணிகமாகும்?
   2) இவ் சம்பவ கற்கையைத் தொடர்புபடுத்தி வணிகத்தில் அக்கறை உடைய தரப்பினர்களைக் குறிப்பிடுக.
   (02 புள்ளிகள்)

3. "மாஸ் சென்ரர்" தனது வியாபாரப் பெயரைப் பதிவு செய்ய வேண்டிய அவசியமில்லை"
   1) இக் கூற்றை ஏற்றுக்கொள்கிறீரா?
   2) காரணம் தருக. (02 புள்ளிகள்)

4. இச் சம்பவ கற்கையைத் தொடர்புபடுத்தி பலம், பலவீனம், சந்தர்ப்பம், சவால்களை இனம் காண்க. (02 புள்ளிகள்)

5. 1/1/2022, 3/1/2022 இல் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களின் விளைவுகளை சொத்து = உரிமை+ பொறுப்புக்கள் எனும் கணக்கீட்டு சமன்பாட்டில் காட்டுக. (02 புள்ளிகள்)

6. 1) 5/1/2022 இல் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கலுக்கான இரட்டைப்பதிவினைத் தருக.
   2) அக் கொடுக்கல் வாங்கலுக்கான இரட்டைவிளைவுகளைத் தருக. (02 புள்ளிகள்)

7. 3/1/2022 இலும் 5/1/2022 இலும் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கலுக்கான மூல ஆவணங்களையும் மூல ஏடுகளையும் தருக. (02 புள்ளிகள்)

8. ஜனவரி மாதத்திற்கான கிடைக்கப்பெற்ற வங்கி கூற்றின்படி
   காசோலை புத்தகக்கட்டணம் 2000/= மற்றும்
   நேரடி வைப்பு 20 000/= என்பன வங்கிக் கணக்கில் பதிய வேண்டியுள்ளது.
   திருத்தப்பட்ட வங்கிக் கணக்கினைத் தயார் செய்க. (02 புள்ளிகள்)

9. 1) வங்கிக்கணக்கும், வங்கிக்கணக்கிணக்கக்கூற்றும் வேறுபடுவதற்கான காரணங்கள் 2 தருக.
   2) பின்வருவனவற்றை சொத்து. பொறுப்பு, உரிமை, வருமானம், செலவினம் எனக் குறிப்பிடுக.
      a. காணி கட்டிடம் ................................
      b. வங்கி மேலதிகப்பற்று ....................
      c. பெற்ற கழிவு ......................................
      d. நிலையான வைப்பு .......................... (02 புள்ளிகள்)

10. 2022 ஜனவரி மாதத்திற்கான காசுக்கணக்கைத் தயார் செய்து மீதியை அறிக. (02 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

## பகுதி "அ"

❖ **ஏதாவது 02 வினாக்களிற்கு மாத்திரம் விடையளிக்குக.**

**02.**

1. 1) தேவைகள், விருப்பங்கள் என்பவற்றை வேறுபடுத்துக.
   2) வணிகத்தின் பிரதான 2 நோக்கங்களும் எவை? (02 புள்ளிகள்)

2. பின்வரும் கூற்றுக்கள் உண்மையா (T) பொய்யா (F) எனக் குறிப்பிடுக.
   1) வணிகத்தில் அக்கறை உடையவர்கள் என்ற ரீதியில் சமூகம் வியாபார நடவடிக்கைகளில் அக்கறை செலுத்துகின்றது. (   )
   2) பல்வேறு வேலை வாய்ப்புக்களை உருவாக்குவது வணிகத்தின் நோக்கம் அன்று. (   )
   3) வணிகத்தின் நிலைப்புத் தன்மையானது அதன் வாடிக்கையாளர்களில் தங்கியுள்ளது. (   )
   4) தனது வியாபாரப் பெயரை பதிவு செய்வதன் ஊடாக தனியாள் வியாபாரமானது சட்ட ஆளுமையைப் பெறமுடியும். (   )

(02 புள்ளிகள்)

3. திரு.மதனும் அவருடைய மகன்களும் "மதன் & சன்ஸ்" என்ற பெயரில் வியாபார அமைப்பை உருவாக்கியிருந்தனர்.
   1) "மதன் & சன்ஸ்" வணிகமானது எவ்வகை வணிகமாகும்?
   2) இவ் வணிகத்தின் 2 பிரதிகூலங்களைத் தருக. (02 புள்ளிகள்)

4. திரு.அருணும் அவனது நண்பர்களும் ஜனநாயக நிர்வாக கட்டமைப்பை உடைய வணிக நிறுவனம் ஒன்றை ஆரம்பிக்கத் தீர்மானித்திருந்தனர்.
   1) அவர்களால் உருவாக்கக்கூடிய வணிகம் எவ்வகையானது?
   2) அவ் வணிகம் எந்த சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டு பதிவு செய்ய வேண்டும்? (02 புள்ளிகள்)

(மொத்தம் 08 புள்ளிகள்)

**03.**

1. 1) சட்ட ஆளுமையற்ற வியாபார அமைப்புக்கள் 02 தருக.
   2) இயக்குனர் சபையால் நிர்வகிக்கக் கூடிய வியாபார அமைப்புக்கள் 02 தருக. (02 புள்ளிகள்)

2. பின்வரும் கூற்றுக்கள் உண்மையா (T) பொய்யா (F) எனக் குறிப்பிடுக.
   1) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவானது ஒரு கூட்டுத்தாகபன அமைப்பாகும். ( )
   2) பல்வேறு அத்திய அவசிய சேவைகளை வழங்கும் நோக்கில் அரச திணைக்களங்கள் உருவாக்கப்படுகின்றன. ( )
   3) தனியாள் வியாபாரத்தை பொறுத்தவரை வியாபார பெயர் பதிவானது. அடையாளத்தையும் அங்கீகாரத்தையும் ஒருபோதும் தரப்போவதில்லை. ( )
   4) உற்பத்தி செயன்முறையன் போது மனிதனால் வழங்கப்படும் எவையும் உற்பத்திக் காரணிகள் என அழைக்கப்படும். ( )

(02 புள்ளிகள்

(மொத்தம் 08 புள்ளிகள்)

3. திரு. மிதுன் என்பவர் தனது சொந்த சேமிப்பு பணம் 200 000/= ரூபாவை வங்கியொன்றில் நிலையான வைப்பில் இட்டார்.
   1) நிலையான வைப்பு என்பதனால் நீர் விளங்குவது யாது?
   2) அவசர நிலைமையின் போது திரு.அருண் என்பவர் எவ்வாறு இவ் வைப்பிலிருந்து பணத்தை மீளப்பெற முடியும்? (02 புள்ளிகள்)

4. திரு. லவன் தனது முகாமையாளர் திரு.போஸிடமிருந்து இலங்கை வங்கி, பொதுமுறை கோடிட்ட காசோலை 100 000/= ரூபாவைப் பெற்றிருந்தார்.
   1) காசோலையுடன் தொடர்புடைய பின்வரும் நபர்களை அடையாளம் காண்க.
      வரையுனர் -
      வரையுனி -
      கொடுணி -
   2) திரு. லவன் இக் காசோலையை எவ்வறு காசாக மாற்றலாம்? (02 புள்ளிகள்)

(மொத்தம் 08 புள்ளிகள்)

**04.**

1. 1) முகாமைத்துவம் என்றால் என்ன?
   2) வினைதிறன், விளைதிறன் என்பவற்றை வேறுபடுத்துக. (02 புள்ளிகள்)

2. பின்வரும் கூற்றுக்கள் உண்மையானவையா (T) பொய்யா (F) எனக் குறிப்பிடுக.
   1) ஒவ்வொரு வகுப்பறைகளும் நாளாந்த சுத்தம் செய்யப்பட்டுள்ளதா என்பதை மாணவத் தலைவர்கள் மேற்பார்வை செய்வது ஒழுங்கமைத்தல் ஆகும். ( )
   2) திணைக்களங்கள் சட்ட ஆளுமை உடைய அமைப்புக்களாகும். ( )
   3) இடர்களை ஒருமுகப்படுத்துவது காப்புறுதியின் அடிப்படையாகும். ( )
   4) மனித வளங்களை நெறிப்படுத்தும் செயற்பாடு வழிபடுத்தல் ஆகும். ( )

(02 புள்ளிகள்)

3. திரு. ரோமியோ என்பவர் தனது மனைவியின் ஆயுளை இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தில் காப்புறுதி செய்திருந்தார்.
   1) மேற்படி சம்பவ கற்கையின்படி பின்வரும் நபர்களை அடையாளம் காண்க.
      காப்புறுதி செய்வோர் -
      காப்புறுத்துவோர் -
   2) மேற்படி சம்பவ கற்கையுடன் தொடர்புடைய 2 காப்புறுதி தத்துவங்களைத் தருக.

(02 புள்ளிகள்)

4. கணித வல்லுனர்களை அதிகரிக்கும் பிரதான நோக்கில் கணித மன்றமானது “கிங்” பாடசாலையின் பழைய மாணவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. இந்த இலக்கை அடைவதற்கான மாலை நேர வகுப்புக்களை ஒழுங்குபடுத்தியதோடு கணித விரிவுரையாளர்களையும் நியமித்திருந்தார்கள். சிரேஷ்ட கணித ஆசிரியரால் மேற்படி செயற்பாடுகள் வாரந்தோறும் மேற்பார்வை செய்யப்பட்டு வழியப்படுத்தப் பட்டது.
   மாதாந்த பரீட்சை ஒன்றினை நடாத்துவதன் மூலம் இலக்குகள் வெற்றிகரமாக அடையப்படுகின்றன என்பன உறுதிப்படுத்தப்படுகின்றது.
   1) முகாமைத்துவத்தின் பிரதான செயற்பாடுகள் யாவை?
   2) மேற்படி சம்பவ கற்கைக்கு அமைவாக 4 பிரதான முகாமை செயற்பாடுகளையும் அடையாளம் காண்க. (02 புள்ளிகள்)

(மொத்தம் 08 புள்ளிகள்)

**பகுதி "ஆ"**

❖ **ஏதாவது 02 வினாக்களிற்கு மாத்திரம் விடையளிக்குக.**

**05.**

1. 1) கணக்கீடு என்றால் என்ன? (1 புள்ளி)
   2) உரிமையில் அதிகரிப்பை ஏற்படுத்த ஏதுவாக அமையும் 02 காரணங்கள் எவை? (1 புள்ளி)

2. பேரேட்டு கணக்குகளைத் தந்து ஒவ்வொன்றுக்கும் 2 உதாரணங்கள் தருக. (02 புள்ளிகள்)

3. டில்சான் வியாபாரமானது ஆடை வியாபாரத்தை 1/1/2022 இல் ஆரம்பித்தது. ஜனவரி மாதத்தில் இடம்பெற்ற வியாபார கொடுக்கல் வாங்கல்கள் வருமாறு.
   1) 200 000/= மூலதனமாக இடப்பட்டது.
   2) வங்கிக்கடன் பெற்றது 100 000/=
   3) கொள்வனவு 60 000/=
   4) 60 000/= கிரயமான பொருட்கள் 95 000/= இற்கு விற்பனை செய்யப்பட்டது.

   மேற்படி நடவடிக்கைகளின் விளைவுகளை
   சொத்துக்கள் = உரிமை + பொறுப்புக்கள் எனும் கணக்கீட்டு சமன்பாட்டில் காட்டுக.
   (04 புள்ளிகள்)

4. மாருதி வணிகத்தின் 1/1/2022 இல் வங்கிக்கணக்கு மீதி 75 000/= வரவு மீதியாக இருந்தது. ஜனவரி மாதத்திற்காக இடம்பெற்ற கொடுக்க வாங்கல்கள் வருமாறு.
   1) விற்பனை 100 000/= காசோலை மூலம் அது அன்றைய தினமே வங்கியில் இடப்பட்டது.
   2) சம்பளம் கொடுத்தது காசோலை மூலம் 30 000/=
   3) காசு வங்கியில் இட்டது 40 000/=
   4) மதனுக்கு விற்பனை 35 000/=

   வங்கி கணக்கை தயாரித்து வங்கி மீதியை அறிக. (04 புள்ளிகள்)
   (மொத்தம் 12 புள்ளிகள்)

**06.**

1. 1) சில்லறைக் காசு முற்பணம் 5000/= ரூபாவிற்கான இரட்டை பதிவு யாது? (1 புள்ளி)

   2) வியாபார நிறுவனமொன்றின் 1/1/2022 இல் சில்லறைக்காசு மீதி 800/= ரூபாவாகவும் இருந்தது. 1/2/2022 சில்லறைக்காசு மீள்நிரம்பல் 7200/= ஆகவும் இருந்தது. இவ் வியாபார நிறுவனத்தின் சில்லறைக்காசு முற்பணம் யாது? (1 புள்ளி)

2. பொறுப்புக்களின் 3 பண்புகள் எவை? (02 புள்ளிகள்)

3. மொறட்டுவ தளபாட வியாபார நிறுவனத்திற்குரிய கொடுக்கல் வாங்கலுக்கான பின்வரும் அட்டவணையை நிரப்புக.

| | கொடுக்கல் வாங்கல்கள் | மூல ஆவணம் | மூலஏடு |
|---|---|---|---|
| 1) | தளபாடங்கள் கடனுக்கு கொள்வனவு 120 000/= | | |
| 2) | தளபாட கொள்வனவு 40 000/= | | |
| 3) | மோட்டார் வான் கடனுக்கு கொள்வனவு 200 000/= | | |
| 4) | சம்பளம் செலுத்தியது 20 000/= | | |

(04 புள்ளிகள்)

4. 2022 ஜனவரி மாதத்திற்கான சில்வர் வியாபார நிறுவனத்தின் கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறு

| | | | |
|---|---|---|---|
| 03.01.2022 | மதுவிற்கு விற்பனை, பட்டியல் விலை | 100 000/= | வியாபார கழிவு 10% |
| 05.01.2022 | விற்பனை | 50 000/= | |
| 08.01.2022 | கொள்வனவு | 120 000/= | |
| 10.11.2022 | நெல்சனுக்கு விற்பனை, பட்டியல் விலை | 60 000/= | வியாபார கழிவு 10% |
| 18.01.2022 | ஜெனிக்கு விற்பனை | 50 000/= | |

விற்பனை நாளேட்டையும் அதனுடன் தொடர்புடைய பேரேட்டு கணக்குகளையும் தயார் செய்து சமப்படுத்துக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 12 புள்ளிகள்)

**07.**

1. a) பொதுநாட்குறிப்பை மூல ஏடாகக் கொண்ட 2 கொடுக்கல்வாங்கல்களை தருக. (1 புள்ளி)
   b) மாருதி கம்பனியிடமிருந்து மோட்டார் வான் கொள்வனவு 150 000/= இற்கான இரட்டைப்பதிவைத் தருக. (1 புள்ளி)

2. கணக்கு பதிவில் போதிய அறிவில்லாத நிரு றொபேட்டினால் தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதி சமப்பட வில்லை. தவறுகளுடன் தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

**பரீட்சை மீதி**

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| காணி கட்டிடம் | 500 000 | |
| தளபாடம் | 200 000 | |
| கடன் கொடுத்தோர் | 100 000 | |
| கடன்பட்டோர் | | 80 000 |
| விற்பனை | | 300 000 |
| கொள்வனவு | | 100 000 |
| சம்பளம் | 30 000 | |
| பெற்ற வட்டி | 30 000 | |
| வங்கி கடன் | 50 000 | |
| மூலதனம் | 430 000 | |
| தொங்கல் க/கு | | 860 000 |
| | 1340 000 | 1340 000 |

திருத்தப்பட்ட பரீட்சை மீதியைத் தயார் செய்க. (02 புள்ளிகள்)

3. டெல்றா வியாபார நிறுவனத்திற்காக 31.01.2020 இற்காக தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதி சமப்பட வில்லை. 5000/= வரவு மீதி தொங்கல் க/கு இல் சமப்படுத்தப்பட்டது.
   பின்வரும் தவறுகள் கண்டுபிடிக்கப்பட்டன.
   1) சம்பளம் செலுத்தியது 20 000/= மூல ஆவணத்திலேயே தவறவிடப்பட்டது.
   2) மாலாவிற்கு செலுத்திய காசு 6000/= பாலா கணக்கில் பதியப்பட்டது.
   3) விற்பனை 15 000/= விற்பனைக் கணக்கில் பதியப்படவில்லை.
   4) கொள்வனவுக் க/கு மீதி 10 000/= பரீட்சை மீதியில் செலவு நிரலில் பதியப்பட்டிருந்தது.
      i. வழுக்களை திருத்துவதற்கான நாட்குறிப்பு பதிவுகள் விளம்பலுடன்
      ii. தொங்கல் கணக்கு (02 புள்ளிகள்)

4. ஜம்போ வியாபார நிறுவனத்தின் வங்கிக்ககு 31.01.2022 இல் 85 000 /= ரூபா வரவு மீதியாக இருந்தது. ஜனவரி மாதத்திற்கான கிடைக்கப்பெற்ற வங்கிகூற்று வேறு மீதியைக் காட்டியது. பின்வரும் காரணங்கள் கண்டறியப்பட்டன.

| | | |
|---|---|---|
| - மாற்றப்படாத காசோலை | - A 108 | 15 000/= |
| - | - A 132 | 10 000/= |
| - வசூலிக்கப்படாத வைப்புக்கள் | | 30 000/= |
| - நிலையான கட்டளையின் பேரில் வங்கியால் செலுத்தப்பட்ட தொலைபேசி | | 12 000/= |

   வங்கிக்க/கு இல் இடம்பெறவில்லை -
   பின்வருவனவற்றைத் தயார் செய்க.
   1) திருத்திய வங்கிக் க/கு
   2) வங்கி கணக்கிணக்கக்கூற்று (04 புள்ளிகள்)

(மொத்தம் 12 புள்ளிகள்)